ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2020/6 - 2017 මැයි මස 22 වැනි සඳුදා - 2017.05.22

*2020/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், மொறட்டுவை நகர சபை எல்லைக்குள்ளான, கீழே விபரிக்கப்பட்ட காணியினை இன்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா. உ.),
பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள், "சுஹுறுபாய",
பத்தரமுல்லை,
2017, மே 16.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவு, மொறட்டுவை மாநகர சபை எல்லையுள்ளான மொறட்டுவை கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் அலுவலகத்தின் சிரேஷ்ட அலுவலரினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 520214 இல் காணித்துண்டு இல. 165 என காட்டப்பட்ட "மாதன்கஹவத்தை" என்றழைக்கப்படும் காணியானது, வடக்கில்; பூர்வாங்க மாதிரிப்படத்தின் காணித்துண்டுகள் 123, 124 மற்றும் 125 ஆகியவற்றையும், கிழக்கில்; அம்மாதிரிப்படத்தின் காணித்துண்டுகள் 121 மற்றும் 179 ஆகியவற்றையும், தெற்கில் ; காணித்துண்டு இல. 180 இனையும் மேற்கில் ; பூர்வாங்க மாதிரிப்படத்தில் குறிக்கப்பட்டுள்ளவாறு காணித்துண்டுகள் 182 மற்றும் 163 ஆகியவற்றையும் எல்லைகளாக சூழப்பட்டு 0.1830 ஹெக்டெயார் விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.

*6- 178*